O.S. No. 43/2007 நாள்.13.09.2022

PW1 – ராஜகோபால்

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. தொண்டி வெள்ளாளர் சொசைட்டிக்கான மொத்த சொத்துக்களுடைய விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தாவா சொத்தின் விஸ்தீரணம் அளவு தெரியும் மற்ற சொத்துக்களின் அளவு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. தொண்டி வெள்ளாளர் சொசைட்டிக்கு 3 இலக்க சொத்துக்கள் பாத்தியப்பட்டது என சொல்கிறீர்கள் என்றால் ஆமாம். தாவா சொத்து தவிர மீதமுள்ள இரண்டு இலக்க சொத்துக்கள் எங்கே உள்ளது என்றால் தொண்டியில் தான் உள்ளது அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

2. தாவா சொத்து தொண்டி வெள்ளாளர் டிரஸ்டுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் முன்னோர்கள் காலத்தில் இருந்தே டிரஸ்டுக்கு சொத்துக்கள் பாத்தியப்பட்டது. தொண்டி வெள்ளாளர் டிரஸ்ட் என்பது சரியா அல்லது தொண்டி வெள்ளாளர் தெரு என்பது சரியா என்றால் தொண்டி வெள்ளாளர் தெரு என்பது தான் சரி. எனது சொசைட்டிக்கான பதிவு ஆவணத்தை பார்த்தால் சொசைட்டிக்கான சொத்துக்களின் விவரம் தெரிய வரும் என்றால் அந்த ஆவணத்தை பார்த்தால் தெரியும், அந்த ஆவணம் தற்போது என்னிடம் இல்லை.

3. வா.சா.ஆ.9 வது ஆவணம் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதி மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கு சென்று தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனு தள்ளுபடியாகி அதில் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டதை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரவே நான் இந்த ஆவணத்தை தாக்கல் செய்தேன். மேலே கூறிய வா.சா.ஆ.9 வது ஆவணத்தின் உத்தரவில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும்.

4. வா.சா.ஆ.3 ஆவணத்தின் உத்தரவை பெறுவற்கு மனுவை யாரிடம்

கொடுத்தேன் என்றால் டிஆர்ஓயிடம் கொடுத்தேன். வா.சா.ஆ.3 உத்தரவு பெறுவதற்கு கொடுக்கப்பட்ட மனு தாவா சொத்தை பொறுத்தவரை பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது அல்ல எங்களுக்கு பாத்தியப்பட்டது என பட்டா வழங்க கோரி மனு அளித்தேன். மேலே பெறப்பட்ட உத்தரவு பெறப்பட்டதற்கான மனுவில் பிரதிவாதியை எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டதா என்றால் சேர்க்கப்படவில்லை.

**(சாட்சியிடம் கேட்டப்பட்ட கேள்விக்கு, சாட்சிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் சாட்சியம் அளிக்க முடியாததை கவனத்தில் கொண்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சியம் இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது.)**